பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 59** **நாள்: 26.05.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆறு பாடப்பிரிவுகளுக்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெற உள்ளது. விருப்பமுள்ளவர்கள் 07.06.2017 அன்றுக்குள் விண்ணப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னைப் பள்ளிகளில் படித்த மாணவ மாணவியர்களின் எதிர்காலம் சிறக்க மத்திய அரசின் NCVT சான்றிதழ் உடன் கூடிய தொழிற்பயிற்சி கீழ்க்காணும் தொழிற் பாடப்பிரிவுகளில் அளிக்கப்படுகின்றது.

| வ. எண் | பயிற்சி வகுப்புகள் | பயிற்சி காலம் | சேர்க்கை எண்ணிக்கை | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1. | கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர் (Computer) | 1 வருடம் | 52 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 2. | குழாய் பொருத்துநர் (Plumber) | 1 வருடம் | 52 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 3 | பொருத்துநர் (Fitter) | 2 வருடம் | 21 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 4. | கம்மியர் மோட்டார் வாகனம் (Motor Mechanic Vehicle) | 2 வருடம் | 21 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 5. | மின்பணியாளர் (Electrician) | 2 வருடம் | 21 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| 6. | எலக்ட்ரானிக் மெக்கானிக் (ElectronicMechanic) | 2 வருடம் | 26 | 10ம் வகுப்பு தேர்ச்சி |
| | | மொத்தம் | 193 | |

சென்னைப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களின் குழந்தைகளுக்கும் மாணவர்கள் சேர்க்கையில் முன்னுரிமை அளித்து மீதி காலியாக உள்ள இடங்களுக்கு சென்னை மாவட்டத்தில் உள்ள பிற பள்ளிகளில் படித்த ஏழை எளிய மாணவர்களை அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் விதிகளின்படி சேர்க்கை வழங்கப்படும்.

**சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தின்சிறப்பு அம்சமானது முற்றிலும் இலவச பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவச சீருடை, இலவச பஸ் பாஸ், பயிற்சி காலத்தில் மாதந்தோறும் ரூ.500/–பயிற்சி உதவித்தொகை மற்றும் இலவச மடிக்கணினி வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி முடித்த பயிற்சியாளர்களுக்கும் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று தரப்பட்டு வருகிறது.**

விண்ணப்பப்படிவம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய **கடைசி நாள் 07.06.2017.** விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்த அனைவரும் சேர்க்கைக்காக **09.06.2017** அன்று காலை 10 மணிக்கு **சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம், E- டிப்போ லாரி நிலையம் ரோடு, முத்தையா தெரு அருகில், லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை–14. (தொலைபேசி எண் : 2847 3117 பஸ் நிறுத்தம் : ஐஸ் ஹவுஸ் காவல் நிலையம் அருகில் அல்லது எல்லோ பேஜஸ்)** என்ற முகவரியில் நடைபெறும் கலந்தாய்வில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் (பள்ளி மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ்) கலந்துகொள்ள வேண்டும். கலந்தாய்வின் போது விண்ணப்பதாரரின் மதிப்பெண் தகுதி தரவரிசையின்படி மற்றும் இடஒதுக்கீட்டின் அடிப்டையில் பாடப்பிரிவு ஒதுக்கீடு செய்து கலந்தாய்வு அன்று பயிற்சியில் சேருவதற்கான அனுமதி வழங்கப்படும். பயிற்சியில் சேர வயது வரம்பு 15 முதல் 40 வயது ஆகும்.

மாணவர்கள் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**